RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-94 | 11 ஏப்ரல் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## டெல்டா பாசனம்: மேட்டூர் அணையில் இருந்து ஜூன்.12ல் தண்ணீர் திறந்து வைக்கிறார் முதல்வர் ஸ்டாலின்

மேட்டூர், ஏப்.11

டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையில் இருந்து தண்ணீரை வரும் ஜூன் 12ம் தேதி முதல்வர் திறந்து வைக்கிறார் என நீர்வளத்துறை கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் தமிழக நீர்வளத் துறையின் கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா இன்று காலை ஆய்வு மேற்கொண்டார். அணையின் வலது கரை, இடது கரை, 16 கண் மதகு, சுரங்கம் உள்ளிட்ட பகுதிகளையும், அணையில் நடைபெற்று வரும் பராமரிப்பு பணிகளையும் பார்வையிட்டார். மேல்மட்ட மதகு, கீழ்மட்ட மதகு ஆய்வு சுரங்கம் மற்றும் அணை மின் நிலையத்தையும் ஆய்வு மேற்கொண்டார்.

அணைக்கு வரும் நீரின் அளவு, நீர் வெளியேற்றம் குறித்து கேட்டறிந்தார். பின்னர், நீர்வளத்துறை திருச்சி மண்டல தலைமை பொறியாளர் தயாளகுமார் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: வழக்கமான ஆய்வுபணிக்காக வந்துள்ளேன். மேட்டூர் அணை பராமரிப்பு பணி சிறப்பாக நடந்து வருகிறது. மேட்டூர் அணை நல்ல நிலையில் உள்ளது.

மேட்டூர் அணையில் இருந்து டெல்டாபாசனத்திற்கு தண்ணீர் திறக்கும் முன்பாக நேரடியாக பார்வையிட்டு அணையின் நிலவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஜூன் 12ம் தேதி, தமிழ்நாடு முதல்வர் நேரில் வந்து மேட்டூர் அணை திறப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதனால் முன்கூட்டியே பராமரிப்பு பணிகளை முடிக்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையில் கூடுதல் பணிகள் கேட்டுள்ள நிலையில், அந்தப் பணிகள் வழங்கப்படும். தற்போது, ரூ 20 கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது. 6 மாதங்கள் மட்டுமே பணிகள் செய்ய முடியும். தற்போது, 2 மாதங்களுக்கு முன்பாக மேட்டூர் அணை பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணை திறப்பிற்கு முன்பாக இந்தப் பணிகளை முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேட்டூர் அணை திறக்கப்பட்ட பிறகு பணிகள் நிறுத்தப்படும். பாசன காலம் முடித்த பிறகு பணிகள் துவக்கப்படும். என்றார். ஆய்வின் போது மேட்டூர் செயற்பொறியாளர் வெங்கடாசலம், உதவி செயற்பொறியாளர்கள் செல்வராஜ், மதுசூதனன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**நீர்வரத்து சரிவு:**

மேட்டூர் அணைக்கு நேற்று நீர்வரத்து விநாடிக்கு 1,872 கன அடியாக இருந்த நிலையில் இன்று 922 கன அடியாக சரிந்துள்ளது. அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 1,000 கன அடி திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 107.79 அடியாகவும், நீர் இருப்பு 75.30 டிஎம்சியாகவும் உள்ளது.

## ஸ்ரீவில்லிபுத்தூரில் இன்று ஆண்டாள் ரெங்கமன்னார் திருக்கல்யாணம்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.11



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலில் இன்று (ஏப்ரல் 11) மாலை 5.30 முதல் 6.30 மணிக்குள் ஆண்டாள், ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடைபெற உள்ளது.

108 வைணவ திவ்ய தேசங்களில் பிரசித்தி பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் மகளாக அவதரித்த ஆண்டாள் மார்கழி மாதத்தில் திருப்பாவை பாடி பாவை நோன்பு இருந்து பங்குனி உத்திரம் நாளில் ஸ்ரீரெங்கம் ரெங்கமன்னாரை மணம் புரிந்தார் என்பது கோயில் வரலாறு. ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டு தோறும் பங்குனி உத்திரம் நாளில் ஆண்டாள் ரெங்கமான்னார் திருக்கல்யாண திருவிழா கோலகலமாக நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, இந்த ஆண்டு திருக்கல்யாண திருவிழா ஏப்ரல் 3ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 13 நாட்கள் நடைபெறும் திருக்கல்யாண திருவிழாவில் கருட சேவை, கோவர்த்தனகிரி கிருஷ்ணர் உள்ளிட்ட பல்வேறு உற்சவம் நடைபெற்றது. பங்குனி உத்திரத்தை முன்னிட்டு மணிக்கு செப்புத் தேரோட்டம் நடந்தது.

மாலை 5.30 முதல் 6.30 மணிக்குள் ஆண்டாள் ரெங்கமன்னார் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. அறங்காவலர் குழு தலைவர் பி.ஆர். வெங்கட்ராமராஜா மற்றும் உறுப்பினர்கள், செயல் அலுவலர் சர்க்கரையம்மாள் ஆகியோர் திருக்கல்யாண திருவிழா ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.

## தமிழகத்தில் சிறுதொழில் நிறுவனங்களுக்கான முதலீட்டு மானிய உச்சவரம்பு ரூ.10 லட்சமாக உயர்த்தப்படும் அமைச்சர் தா.மோ.அன்பரசன்

சென்னை, ஏப்.11



சிறுதொழில் நிறுவனங்களுக்கான கூடுதல் முதலீட்டு மானிய உச்சவரம்பு ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும் என்று சட்டப்பேவையில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்தார்.

சட்டப்பேரவையில் குறு சிறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்த அமைச்சர் தா.மோ.அன்பரசன், புதிய அறிவிப்புகளை வெளியிட்டு பேசியதாவது: சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் 10 சதவீத கூடுதல் முதலீட்டு மானிய உச்சவரம்பு ரூ.5 லட்சத்தில் இருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தி வழங்கப்படும். பழங்குடியினர் நிறைந்த பகுதிகளில் கடன் உத்தரவாதத்துடன் ரூ.100 கோடி அளவில் பழங்குடியினருக்கு தொழில் தொடங்க கடனுதவி வழங்க சிறப்பு முகாம்கள் நடத்தப்படும்.

டெல்டா மாவட்டங்களைச் சேர்ந்த 120 இளைஞர்களுக்கு ரூ.1.2 கோடி மதிப்பீட்டில் உணவு பதப்படுத்தும் தொழில் தொடங்க தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்படும். கவரிங் நகை தொழிலில் புகழ்பெற்ற சிதம்பரம் பகுதியில் கவரிங் நகை உற்பத்தியாளர்களுக்காக லால்புரம் கிராமத்தில் 5 ஏக்கர் பரப்பளவில் ரூ.1.24 கோடி மதிப்பில் சிட்கோ சிறப்பு தொழிற்பேட்டை அமைக்கப்படும்.

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டம் பரணத்தில் ரூ.2.84 கோடி மதிப்பீட்டில் நவீன முந்திரி பதப்படுத்தும் குழுமம் நிறுவப்படும். திருச்சி மாவட்டம் முசிறியில் ரூ.3 கோடி செலவில் கோரைப்பாய் குழுமம் அமைக்கப்படும். ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் சீனாபுரத்தில் ரூ.7.77 கோடியில் நெசவு குழுமம் ஏற்படுத்தப்படும். மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் மகளிர் தொழில் முனைவோருக்காக ரூ.7.97 கோடி செலவில் சிறுதானிய குழுமம் அமைக்கப்படும். சென்னை பெரம்பூரில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் வெள்ளி கலைப்பொருட்கள் குழுமம் நிறுவப்படும்.

திருப்பூர் மாவட்டம் பெருமாநல்லூர் வட்டம் கல்லிப்பாளையம் கிராமத்தில் ரூ.31.75 கோடி செலவில் ஆப்செட் பிரிண்டிங் மற்றும் புக் பைண்டிங் குழுமத்துக்கான பொது வசதி மையம் அமைக்கப்படும். காஞ்சிபுரம் மாவட்டம் திருமுடிவாக்கம் தொழிற்பேட்டையில் ரூ.37.25 கோடி மதிப்பீட்டில் தொழிலாளர் தங்கும் விடுதி கட்டப்படும்.

மேலும் 2 ஆயிரம் உயர்கல்வி நிறுவனங்களில் பயிலும் 6 லட்சம் மாணவர்களுக்கு புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவு தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு இளைஞர் புத்தாக்கம் மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் ரூ.1.9 கோடி மதிப்பீட்டில் 'நிமிர்ந்து நில்' என்ற பெயரில் செயல்படுத்தப்படும்.

100 கிராமங்களில் 100 புத்தொழில் நிறுவனங்களை உருவாக்கும் வகையில் 'கிராமம்தோறும் புத்தொழில்' திட்டம் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும். விண்வெளி தொழில்நுட்பம், கடல் சார் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் இயங்கும் புத்தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் தூத்துக்குடியில் புதிய வட்டார புத்தொழில் மையம் அமைக்கப்படும். இவை உட்பட 43 அறிவிப்புகளை அமைச்சர் வெளியிட்டார்.

## 'பாமகவுக்கு இனி நானே தலைவர்; அன்புமணி செயல் தலைவர்' ராமதாஸ் அதிரடி அறிவிப்பு

விழுப்புரம், ஏப்.11



"பாமகவுக்கு இனி நானே நிறுவனராகவும், தலைவராகவும் செயல்படுவேன்; அன்புமணி செயல் தலைவராகவும், கவுரவத் தலைவராக ஜிகே மணியும் செயல்படுவார்கள்" என்று ராமதாஸ் அறிவித்துள்ளார். இது தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. அடுத்த ஆண்டு தமிழக சட்டப்பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் பாமக தலைவரின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது.

திண்டிவனத்தை அடுத்த தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் மருத்துவர் ராமதாஸ் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் அறிக்கை ஒன்றை ராமதாஸ் வாசித்தார். அதில் அவர் கூறியதாவது: 1980ல் வன்னியர் சங்கம் தொடங்கிய காலத்தில் மருத்துவப் பணியாற்றிக் கொண்டே அரசுப் பேருந்துகளில் நின்று கொண்டே சென்று கிராமங்களில் சமூகப் பணியாற்றினேன். அதன் மூலம் மக்களை வென்றுள்ளேன். சிறு மேஜை மீது, மாட்டு வண்டி மீது நின்று பேசிவிட்டு, அடுத்த கிராமத்திற்கு மிதி வண்டியில் சென்று அக்கிராம மக்களிடம் பேசுவேன்.

1987ல் சாலை மறியல் போராட்டம் நடத்தி 21 பேரை இழந்தேன். 1989ல் பாமகவை தொடங்கினேன். 95 ஆயிரம் கிராமங்களுக்குச் சென்று மக்களை சந்தித்தேன். பின்னர் மிகபிற்படுத்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீடு பெற்றேன். கட்சியின் மூலம் மத்திய அமைச்சர் முதல் உள்ளாட்சி பிரதிநிதிவரை பெற்றோம். இவைகள் எல்லாம் என் சாதனைகளாகும்.

பாளையங்கோட்டை மத்திய சிறை தவிர மற்ற மத்திய சிறைகளில் உரிமைகளுக்கான போராட்டத்துக்காக அடைக்கப்பட்டேன். இதனால் உடல்நலம் பாதிக்கப்பட்டு பாமகவினரின் வேண்டுதலால் உயிர்பெற்றேன்.

2026ம் சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டி பாமக நிறுவரான நானே தலைவராக பொறுப்பேற்றுக் கொண்டு, அன்புமணி செயல் தலைவராக நியமிக்கிறேன். கவுரவத் தலைவராக ஜி கே மணி உள்ளிட்ட பொறுப்பாளர்கள் செயல்படுவார்கள் என்று அந்த அறிக்கையை வாசித்தார். மே 11ம் மாமல்லபுரம் மாநாடு வெற்றிகரமாக செயல்பட அனைவரும் உழைப்போம். இவ்வாறு ராமதாஸ் கூறினார்.

மேலும், "தமிழகத்தில் வேளாண் துறை வளர்ச்சி தற்போது15 விழுக்காடாக குறைந்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. தமிழகத்தில் மொத்த பொருளாதார வளர்ச்சி 9.69 விழுக்காடு வளர்ச்சி அடைத்துள்ளது. இதில் வேளாண் துறையின் பங்களிப்பு 10 விழுக்காடாகும். வேளாண் மக்களுக்கும், மற்ற தொழில் செய்யும் மக்களுக்கும் ஏற்றத்தாழ்வு அதிகரித்துள்ளது. இடிந்துவரும் பள்ளிகளை சீரமைக்க ரூ 10 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும்." என்றார்.

என்ன செய்வார் அன்புமணி? ஏற்கெனவே கடந்த டிசம்பர் மாதம், பாமக சிறப்பு பொதுக் குழுவில் இளைஞரணி தலைவராக ராமதாஸின் பேரன் நியமிக்கப்பட்டதற்கு அன்புமணி கடும் எதிர்ப்பு தெரிவித்தார். இதனால் அவர்களிடையே மேடையிலேயே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. 'கட்சியில் இருக்க இஷ்டம் இல்லாதவர்கள் கிளம்பலாம்; இது நான் தொடங்கிய கட்சி' என ராமதாஸ் ஆவேசமாக தெரிவித்தார். தொடர்ந்து, தனிக் கட்சி அலுவலகம் தொடங்குவதாக அன்புமணி அறிவித்தார்.

இதனால் பாமகவுக்குள் விரிசல் என்ற செய்திகள் வெளியாகின. ஆனால் அது நீர்த்துப் போகும்படி அன்புமணி ராமதாஸ் 'எங்களுக்கு எல்லாமே தலைவர்தான்' என்று சொல்லி முடித்தார். இந்நிலையில் தற்போது மீண்டும் ராமதாஸ் இவ்வாறான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இதற்கு அன்புமணி ராமதாஸ் இன்னும் எதிர்வினையாற்றாத நிலையில் அத்தனை எதிர்பார்ப்பும் அன்புமணி என்ன செய்யப் போகிறார் என்பதில் குவிந்துள்ளது.

## பாட்டியாலா நீதிமன்றத்தில் ராணா ஆஜர்! போலீஸ் பாதுகாப்பு அதிகரிப்பு

புதுடெல்லி, ஏப்.11





மும்பை தாக்குதலில் தொடர்புடைய பாகிஸ்தான் தீவிரவாதி தஹாவூர் ராணா டெல்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ள நிலையில், நீதிமன்ற வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தின் முன்பு துணை ராணுவப்படையினர் மற்றும் டெல்லி போலீஸார் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர். அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் வகையில் நீதிமன்றத்துக்கு வரும் பார்வையாளர்கள் முழு சோதனைக்கு பின்பே உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

ராணா தொடர்பான விவகாரத்தை என்ஐஏ நீதிபதி விசாரிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனிடையே, தஹாவூர் ராணாவை உயர் பாதுகாப்பு கொண்ட சிறையில் அடைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. நீதிமன்ற உத்தரவுக்காக காத்திருப்பதாகவும் திகார் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் பிறந்த ராணா, அந்நாட்டு ராணுவத்தில் மருத்துவராக பணியாற்றினார். 1997ல் அதிலிருந்து விலகி, மனைவியுடன் கனடாவில் குடியேறினார். இருவருக்கும் 2001ல் கனடா குடியுரிமை கிடைத்தது. பின்னர் சிகாகோவில் குடியேறிய அவர், குடியுரிமை சேவை நிறுவனத்தை தொடங்கினார்.

தனது சிறுவயது நண்பரான டேவிட் ஹெட்லியுடன் இணைந்து தீவிரவாத செயலில் ஈடுபடத் தொடங்கினார். இதன் ஒரு பகுதியாக ராணா மும்பையில் தங்கி, தாக்குதலுக்கு நோட்டமிட்டதாக கூறப்படுகிறது. நபிகள் நாயகம் குறித்து சர்ச்சைக்குரிய கார்ட்டூன் வெளியிட்ட டென்மார்க்கின் நாளிதழ் அலுவலகம் மீது தாக்குதல் நடத்த ராணா திட்டமிட்டிருந்தார். ஆனால் அது முறியடிக்கப்பட்டது.

## சென்னையில் முதல்முறையாக அமைகிறது மாற்று திறனாளி வீரர்களுக்காக விளையாட்டு விடுதி: உதயநிதி ஸ்டாலின் தகவல்

சென்னை, ஏப்.11



சென்னையில் முதல்முறையாக மாற்றுத் திறனாளி வீரர்களுக்காக விளையாட்டு விடுதி அமைக்கப்பட உள்ளதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் டெல்லியில் நடைபெற்ற கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற 62 வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.1.11 கோடி மதிப்பிலான உயரிய ஊக்கத் தொகை வழங்கும் விழா, நேரு உள் விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்றது.

இவ்விழாவுக்குத் தலைமை தாங்கிய துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், ஊக்கத் தொகையுடன் 6 விளையாட்டு வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.10.90 லட்சத்துக்கான காசோலைகள் மற்றும் அதிநவீன சைக்கிள் உள்ளிட்ட விளையாட்டு உபகரணங்களையும் வழங்கினார்.

ரூ.27.18 கோடி ஊக்கத் தொகை: அதைத்தொடர்ந்து அவர் பேசும்போது, "திமுக பொறுப்பேற்ற பின் கடந்த 4 ஆண்டுகளில் 258 மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு ரூ.27.18 கோடி மதிப்பீட்டில் உயரிய ஊக்கத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோல் 198 மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் ரூ.5.29 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

பாரா விளையாட்டு வீரர்களுக்காக சென்னை, திருச்சி, மதுரை, சேலம், கடலூர் ஆகிய இடங்களில் ரூ.7.38 கோடி மதிப்பீட்டில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் திருவள்ளூர், திருவண்ணாமலை, திண்டுக்கல், தஞ்சாவூர், கிருஷ்ணகிரி ஆகிய 5 மாவட்டங்களில் ரூ.7.05 கோடி மதிப்பில் புதிய பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் பணிகளும் விரைவில் தொடங்கவுள்ளன. மேலும் சென்னையில் முதல்முறையாக மாற்றுத் திறனாளி வீரர்களுக்கான விளையாட்டு விடுதி அமைக்கப்பட உள்ளது" என்று தெரிவித்தார்.

முன்னதாக சுயஉதவிக் குழு மகளிரின் மன வளத்தையும், உடல் உறுதியையும் மேம்படுத்தும் வகையில் கால்பந்து, கோகோ, கபடி, ரங்கோலி, கயிறு இழுத்தல் உள்ளிட்ட பன்முக கலாச்சார போட்டிகள் மண்டல அளவில் நடத்தப்பட்டிருந்தன.

இதில் வெற்றிபெற்ற 24 மாவட்டங்களைச் சேர்ந்த 39 சுயஉதவிக் குழுக்களில் உள்ள 400 மகளிர் பங்கேற்கும் மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, நேரு பூங்காவில் உள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் விளையாட்டு மேம்பாட்டுத் துறை செயலர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, ஊரக வளர்ச்சித் துறை செயலர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஸ்ரேயா பி சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தமிழகத்தில் மீன்களின் விலை உயரும் அபாயம்



தமிழகத்தில் மீன்பிடித் தடைக்காலம் 2025ஆம் ஆண்டுக்கான மீன்பிடித் தடைக்காலம் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை, மொத்தம் 61 நாட்கள் நடை பெறவுள்ளது. இந்த காலத்தில் மீனவர்கள் கடலுக்கு செல்ல தடை விதிக்கப்படுவதால், சந்தையில் மீன்களின் விலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தடைக்காலத்தை அக்டோபர் மாதத்திற்கு மாற்றி, மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையை ரூ.15,000 ஆக உயர்த்த வேண்டும் என மீனவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

## பெண் தவறவிட்ட தங்கச் செயின்! கண்டெடுத்த இளைஞர்கள்



கன்னியாகுமரி ஏப்11

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் தாழக்குடி அருள்மிகு அழகேஸ்வரி ஜெயந்திஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்ற பங்குனி தேரோட்ட திருவிழாவில் ஏராளமான பக்த பெருமக்கள் கலந்து கொண்டனர். இவ்விழாவில் கார்த்திகா என்ற பெண் தவறவிட்ட ஐம்பொன் தங்கச் சங்கிலியை தாழக்குடி இளைஞர்கள் எடுத்து தாழக்குடி பேரூராட்சி முன்னாள் தலைவரும் கவுன்சிலர் ரோகிணிஅய்யப்பன் அவர்களிடம் ஒப்படைத்தனர். அதனை ஆரல்வாய்மொழி காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் ராஜன் மற்றும் சகாயராஜ் ஆகியவரிடம் கொடுக்கப்பட்டது.பின்னர் தவறவிட்ட கார்த்திகா பெற்று சென்றார்கள். காவல் ஆய்வாளர்கள் அந்த பெண்மணியிடம் அறிவுரை கூறி நகையினை கொடுத்து அனுப்பினார்கள்.

## கீழடியில் நகரும் படிக்கட்டுகள் அமைக்க எம்எல்ஏ கோரிக்கை: அமைச்சர் எ.வ.வேலு உறுதி

சென்னை ஏப் 11



சென்னையில் தமிழக சட்டப்பேரவை கூட்டத்தொடர் மார்ச் 17 முதல் ஏப்ரல் 30 ஆம் தேதி வரை நடைபெறும் என சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார் அதன்படி நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கட்டடங்கள் மானிய கோரிக்கையின் போது மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் ஆ.தமிழரசி ரவிக்குமார் கேள்வி எழுப்புகையில் சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே உள்ள கீழடியில் நான்கு வழிச் சாலையைக் கடக்க முடியாமல் விபத்துகள் ஏற்படுகின்றன. அங்கு நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய மேம்பாலம் அமைக்க திட்டமதிப்பீடும், அளவீடுகளும் எடுக்கப்பட்டுள்ளன. எப்போது பணிகள் முடிக்கப்படும்? என்றார்.

அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதில்: தமிழர்கள் அடையாளத்தின் மொத்த உருவமாக கீழடி உள்ளது. கீழடிக்கு மத்திய அரசின் சாலையை கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. கீழடி அகழாய்வு இடத்துக்கும் பிரதான சாலைக்கும் இடையிலான சாலை குறுகலாக உள்ளது. இதனை விரிவுபடுத்தும் பணிகளை மேற்கொண்டுள்ளோம். நகரும் படிக்கட்டு அமைக்க நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

## மதிமுக முதன்மை செயலாளர் துரை வைகோ பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரத்தில் காலை உணவு வழங்கல்



தாம்பரம் ஏப்11

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் முதன்மை செயலாளர் துரை வைகோ பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரத்தில் காலை உணவு வழங்கப்பட்டது

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் இளம் தலைவர் திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கழக முதன்மை செயலாளருமான துரை வைகோ பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரம் குட்லைப் சென்டரில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு காலை உணவு தாம்பரம் பகுதி கழக செயலாளர் துரை மணிவண்ணன் அவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மாவட்ட கழக செயலாளர் மாவைமகேந்திரன் கலந்துகொண்டு தாம்பரம் குட்லைப்சென்டரில் ஆதரவற்ற குழந்தைகளுக்கு காலை உணவு வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் எஸ்.நாராயணன், மாவட்ட துணைச் செயலாளர் குரோம்பேட்டை ஏ.நாசர், முடிச்சூர் ஆர்.ஏ.ஜெய்சீலன், முன்னாள் நகர செயலாளர் ராஜா முகமது, பகுதி அவை தலைவர் பழக்கடை இரா.அன்பு, பொருளாளர் சீனிவாசன், துணைச் செயலாளர் ஷாஜகான், வட்ட செயலாளர் டிராவல்ஸ் சிவா, சஞ்சய் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சி சிறப்பித்தனர்..



தமிழ்நாடு அரசு பொதுப்பணித்துறை கணக்கு மற்றும் ஆட்சிப் பணியாளர் சங்கர் மதுரை மாவட்டம் சார்பில் மதுரை தல்லாகுளம் பொதுப்பணித்துறை பென்னிகுயிக் வளாகத்தில் சங்க கட்டடத் திறப்பு விழா நடைபெற்றது மாவட்டத் தலைவர் சிவக்குமார் தலைமை தாங்கினார் மாவட்டச் செயலாளர் ராஜா வரவேற்புரை நிகழ்த்தினார் மாநிலத் தலைவர் செல்வம் கட்டிடத்தை திறந்து வைத்து விழா பேரூரணை நிகழ்த்தினார் மாநில பொதுச் செயலாளர் சீனிவாசன் கூட்ட அரங்கம் திறந்து வைத்து விழா பேருரை நிகழ்த்தினார் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத் மாநில தலைவர் பாஸ்கரன் கல்வெட்டு திறந்து வைத்தார் மற்றும் தலைமை பொறியாளர் செல்வராஜன் ரமேஷ் அய்யாசாமி சேகர் மணிகண்டன் செல்வகுமார் ராஜாங்கம் பன்னீர்செல்வம் திருமுருகன் முத்துராஜன் செல்வ பாண்டியன் சிவா பாலன் குணாளன் சீனிவாசன் கவியரசன் சுபாஷினி சரவணகுமார் செல்வம் சேதுராம பாண்டியன் மாவட்ட பொருளாளர் அசோக் ராஜா நன்றி உரை நிகழ்த்தினார்

## துணி பையை பயன்படுத்துவீர்... பாலித்தீன் பைகளை பயன்படுத்தாதீர்.. சிவகங்கை மாவட்டபள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு

சிவகங்கை ஏப்11





சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி மாணவர்களுடைய பாலிதீன் பைகளை தவிர்த்து துணி பைகளை பயன்படுத்த வேண்டும் என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

சிவகங்கை மாவட்டம் தேசிய பசுமை படை சார்பில் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணி பைகளை பயன்படுத்துவது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த முதன்மைக் கல்வி அலுவலர் பாலுமுத்து மாவட்டக் கல்வி அலுவலர் மாரிமுத்து சிவகங்கை மாவட்டம் தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ துணி பைகளை வழங்கினார்.

இதன் தொடர்ச்சியாக மாவட்டத்தில் உள்ள ஆலங்குடி வீதி நகராட்சி உயர்நிலைப்பள்ளி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி புது குடியிருப்பு ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப்பள்ளி பலவான்குடி அழ. வள்ளியம்மையாச்சி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கோட்டையூர் அரசுமேல்நிலைப் பள்ளி திருக்கோஷ்டியூர் அரசு மேல்நிலைப்பள்ளி செம்பனூர் அரசு உயர்நிலைப்பள்ளி ஜெயங்கொண்டான் அரசு மேல்நிலைப்பள்ளி கண்ணங்குடி குருகுலம் மேல்நிலைப் பள்ளி அமராவதி புதூர் முருகப்பா மேல்நிலைப்பள்ளி கல்லல் ஆகிய பள்ளிகளில் மாணவர்களுக்கு பாலித்தீன் பைகளுக்கு மாற்றாக துணி பைகள் வழங்கப்பட்டன.

மாணவர்களுடைய சிவகங்கை மாவட்ட தேசிய பசுமை படை ஒருங்கிணைப்பாளர் பிரிட்டோ அந்த பள்ளி தலைமை ஆசிரியர்கள் பசுமைப்படை ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் துணி பையை பயன்படுத்தும் முக்கியத்துவம் பற்றி எடுத்துரைத்தனர்.







இராமநாதபுரம் மாவட்டம் ஆர் எஸ் மங்கலம் பேரூராட்சி சார்பில் பேரூராட்சி நுழைவாயில் பகுதி மற்றும் பேருந்து நிலைய வளாகத்தில் நீர் மோர் பந்தல் திறப்பு விழா நேற்று பேரூராட்சி செயல் அலுவலர் மாலதி தலைமையில் நடைபெற்றது பேரூராட்சி தலைவர் மவுசூரியா,தி.மு.க.நகர் செயலாளர் கண்ணன் முன்னிலை வகித்தனர் பொதுமக்களுக்கு நீர், மோர்,தர்ப்பூசணி பழம் வழங்கப்பட்டது.இதில் பேரூராட்சி கவுன்சிலர்கள் ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

## காரைக்குடியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் யூத் ஃபார் சயின்ஸ் திட்டமிடல் மற்றும் ஆலோசனைக் கூட்டம்

காரைக்குடி ஏப்11







சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் யூத் ஃபார் சயின்ஸ்க்கான திட்டமிடல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் நேஷனல் கேட்டரிங் கல்லூரி அரங்கில் நடைப்பெற்றது.

இந்நிகழ்விற்கு தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டத் துணைத் தலைவர் முனைவர் சேவற்கொடியோன் தலைமை ஏற்று தொடங்கி வைத்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ஜீவானந்தம் மாவட்டப் பொருளாளர் பிரபு முன்னிலை வகித்தனர். காரைக்குடி கிளைச் செயலாளர் முனைவர் முனியப்பன் வரவேற்றார். யூத் ஃபார் சயின்ஸ் சிவகங்கை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராசு மாநில அளவில் வழங்கப்பட்ட பல்வேறு கருத்துக்களை பகிர்ந்து கொண்டு குழு அமைப்பதற்கான பரிந்துரையை முன்வைத்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி சூழலியல் குறித்தும் ஆரோக்கிய நலவாழ்வு குறித்தும் நெகிழிகளுக்கு பதிலாக துணி பைகளை பயன்படுத்துவது குறித்தும் இளையோர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வளமான இந்தியாவை உருவாக்க அனைவரையும் கேட்டுக்கொண்டார். ராதாகிருஷ்ணன் மரம்கிருஷ்ணன் லெனின்குமார் சாதிக்முகமது அண்ணாதுரை சபிதாபானு ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர்.

காரைக்குடி கிளைத் தலைவர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

# முதலமைச்சர் மாநில இளைஞர் விருது பெற விண்ணப்பிக்கலாம்!

திண்டுக்கல், ஏப்.11

2025 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் மாநில இளைஞர் விருது வரும் 15.08.2025 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது. இவ்விருது பெற தகுதிகள் விவரம் வருமாறு: ஒன்றிய, மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கில் கொள்ளப்படும். இணையதளம் மூலம் 03.05.2025 அன்று மாலை 4.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் விபரங்களுக்கு, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், மாவட்ட விளையாட்டரங்கம், தாடிக்கொம்பு ரோடு, திண்டுக்கல் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 7401703504 என்ற கைப்பேசி வாயிலாகவோ சம்பந்தப்பட்ட அலுவலர்களை தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம், என மாவட்ட ஆட்சித்தலைவர் .செ. சரவணன் தெரிவித்துள்ளார்

# கேளம்பாக்கம் ஊராட்சியில் திமுக சார்பில் நீர்மோர் பந்தல்




கேளம்பாக்கம் ஏப்.11

செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட திருப்போரூர் ஒன்றியம் கேளம்பாக்கம் ஊராட்சியில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆலோசனைப்படி கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ராணிஎல்லப்பன் அவர்கள் ஏற்பாட்டில் தண்ணீர் பந்தலை பொதுமக்களுக்கு திறந்து வைத்தார் திருப்போரூர் ஒன்றிய பெருந்தலைவர் திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் எல்.இதயவர்மன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.சி.அன்புசெழியன் அவர்கள் இந்த நிகழ்ச்சியில் திருப்போரூர் வடக்கு ஒன்றிய கழக துணை செயலாளர் ஏ.ரமேஷ், சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் செ.எல்லப்பன், கேளம்பாக்கம் ஊராட்சி மன்ற துணை தலைவர் கி.பாஸ்கரன், மாவட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள் , உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



மதுரைமாவட்டம்திருமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 19 ஊராட்சிகளுக்கு மொத்தம்50 பேட்டரிவாகனம் வட்டாரவளர்ச்சி அலுவலர் சந்திரகலா. மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மகேஸ்வரன் தீபலட்சுமி, குமரவேல் ஆகியோர் முன்னிலையில் 19ஊராட்சி பேட்டரி வாகனசாவியை ஊராட்சிசெயலர்களிடம் வட்டாரவளர்ச்சி அலுவலர் ஒப்படைத்தார்கள்.




மதுரை மாநகராட்சி தமுக்கம் மைதானம் மதுரை மாநாட்டு மையத்தில் மதுரை மாநகராட்சி மற்றும் தியாகராஜர் பொறியியல் கல்லூரி இணைந்து மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவிகளுக்கான உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி மேயர் இந்திராணி பொன்வசந்த் தலைமையில் நடைபெற்றது அருகில் ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் சரவணபுவனேஸ்வரி , கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



தென்காசி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு வருகை புரிந்த தமிழக பால்வளத்துறை அமைச்சர் ஆர் .எஸ். கண்ணப்பனை தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெய பாலன் தலைமையில் நேற்று கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் பொன்னாடை அணிவித்து வரவேற்றார் அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் சுரேஷ் உள்ளார்

# தாம்பரத்தில் கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா





தாம்பரம் ஏப்ரல் 11

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் புனித தோமையார் மலை வட்டாரம் செங்கல்பட்டு மாவட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கர்ப்பிணி தாய்மார்களுக்கு சமுதாய வளைகாப்பு விழா அம்பேத்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ அவர்கள் தலைமையேற்று சிறப்பு உரையாற்றினார் உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, மண்டல குழுத்தலைவர்கள் டி.காமராஜ், எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ரமணிஆதிமுலம், லிங்கேஸ்வரி பாபு, ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ் பாபு, அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# கோத்ரேஜ் பெட் கேர் இன் கீழ் தமிழ்நாட்டில் ஒரு செல்லப்பிராணி பராமரிப்பு பிராண்டான 'கோத்ரேஜ் நிஞ்ஜா' வை அறிமுகப்படுத்தும் கோத்ரேஜ் நிறுவனம்

திருச்சி, ஏப்ரல் 10




தேசிய செல்லப்பிராணி தினத்தை முன்னிட்டு (ஏப்ரல் 11), கோத்ரேஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் (GCPL) நிறுவனத்தின் துணை நிறுவனமான கோத்ரேஜ் பெட் கேர் (GPC), குடல் ஆரோக்கியம் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும் வகையில் அறிவியல் அடிப்படையில் நாய்களுக்காக உருவாக்கப்பட்ட செல்லப்பிராணி உணவு பிராண்டான கோத்ரேஜ் நிஞ் ஜா வின் அறிமுகத்துடன் தமிழ்நாட்டில் நுழைந்துள்ளது. முதலில் தமிழ்நாட்டில் பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்படுகின்ற நிஞ்ஜா, வளர்ந்துவருகின்ற செல்லப்பிராணி உணவு சந்தையில் நிறிசி நிறுவனத்தின் முதல் படியைக் குறிக்கிறது. அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.500 கோடி முதலீட்டுடன், செல்லப்பிராணி உரிமையாளர்கள் தங்கள் நாய்களுக்கு முழுமையான மற்றும் சமச்சீரான ஊட்டச்சத்தை வழங்க உதவுகின்ற வகையில் #PawsitiveNutrition ஐ ஊக்குவிப்பதற்கு நிறிசி உறுதிபூண்டுள்ளது.

கோத்ரெஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ் லிமிடெட் (GCPL) நிறுவனத்திற்கு பெட் கேர் ஒரு பிரகாசமான வளர்ந்து வரும் சந்தையாக இருக்கிறது. இந்த சந்தை ரூ.6,000 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது, இதில் ரூ.5000 கோடி செல்லப்பிராணி உணவாக மதிப்பிடப்பட்டுள்ளது. 15 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவைப் போன்றிருந்த சீனாவில், இன்று 25% கலோரி மாற்ற விகிதத்துடன் ~20% க்கு நெருக்கமாக செல்லப்பிராணி வளர்ப்பு உள்ளது.

2024 ல் நிறுவப்பட்ட கோத்ரேஜ் பெட் கேர் (GPC), விலங்குகளின் ஊட்டச்சத்து மற்றும் உற்பத்தித் துறையில் அதிநவீன அறிவையும் தொழில்நுட்பத்தையும் கொண்டு வருகின்ற இந்தியாவின் முன்னணி விலங்கு தீவன உற்பத்தியாளரான கோத்ரேஜ் அக்ரோவெட் நிறுவனத்தின் நிபுணத்துவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

கோத்ரேஜ் நிஞ்ஜா அறிமுகத்தின் மூலம் இந்திய செல்லப்பிராணி உணவு சந்தையில் நுழைவதற்கும் புரட்சி ஏற்படுத்துவதற்கும் நிறிசி தனித்துவமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இந்திய செல்லப்பிராணி நாய்களின் விருப்பங்கள் குறித்த ஆழமான புரிதலின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த தயாரிப்பு, உண்மையில் அவற்றின் தேவைகளுக்கு ஏற்ற ஊட்டச்சத்தை உறுதி செய்கின்ற உகந்த சுவை, செரிமானம் மற்றும் உள்ளூர் சூழலுடன் பொருந்தக்கூடிய தன்மை ஆகியவற்றை வழங்குகிறது.

கோத்ரேஜ் பெட் கேர் (GPC) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ராபர்ட் மென்சீஸ் கோத்ரேஜ் பெட் கேர் (GPC) இன் முதல் பிராண்ட் அறிமுகத்தைப் பற்றி கூறுகையில், "இந்தியாவின் அதிவேக வளர்ச்சி கொண்ட செல்லப்பிராணி பராமரிப்பு துறையில் உலகத் தரத்திலான ஒரு வணிகத்தை உருவாக்குவதற்கான கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் குழுமத்தின் நீண்டகால உறுதிப்பாட்டை கோத்ரேஜ் பெட் கேர் குறிக்கிறது. இந்த வணிகம், கோத்ரேஜ் கன்சூமர் ப்ராடக்ட்ஸ் தமிழ்நாடு செல்லப்பிராணி உணவுக்கான முக்கியமான சந்தையாகும், இங்கு தோராயமாக 2030 லட்சம் செல்லப்பிராணி உரிமையாளர் குடும்பங்கள் உள்ளன. கோத்ரெஜ் நுகர்வோர் வணிகத்திற்கு இது மிக முக்கியமான மாநிலமாகும், எனவே நாடு தழுவிய விரிவாக்கத்திற்கான முதல் படியாக இங்கே நிஞ் ஜாவை அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மிகவும் உற்சாகமாக உள்ளோம்.'' என்று கூறினார்.

ஒரு நாயின் நோயெதிர்ப்பு முறையின் 70% குடலில் இருப்பதால், மோசமான ஊட்டச்சத்து நோயெதிர்ப்பு சக்தியைபலவீனப்படுத்துகிறது. பல்வேறு அறிக்கைகளின்படி, இரையகக் குடலிய பிரச்சினைகள் வெட்டரினரி மருத்துவமனை வருகைகளில் 30% வரை உள்ளன, இது உகந்த குடல் ஆரோக்கியம் மற்றும் ஒட்டுமொத்த நலனை உறுதி செய்கின்ற பொருத்தமான நோயெதிர்ப்பு ஊட்டச்சத்துக்களுடன் துல்லியமான, அறிவியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட செல்லப்பிராணி உணவின் தேவையை எடுத்துக்காட்டுகிறது.'' என்றார்.

கோத்ரேஜ் பெட் கேர் (GPC) நிறுவனத்தின் தலைமை இயக்க அதிகாரி மற்றும் செல்லப்பிராணி உணவுத் துறையின் அனுபவம் வாய்ந்த நிபுணர் நிதின் ஜெயின் கூறுகையில் "கோத்ரேஜ்நிஞ்ஜா என்பது ஆண்டுகளாக நடந்த கடுமையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டின் விளைவாகும், இது முழுமையான மற்றும் சமச்சீரான ஊட்டச்சத்து வழங்குவதன் மூலம் செல்ல நாய்களின் குடல் ஆரோக்கியம் மற்றும் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. அனைத்துமூலப்பொருட்களும் தரத்திற்காக மூன்று முறை சோதிக்கப்படுகின்றன. கோத்ரேஜ் நிஞ்ஜா வின் ஒவ்வொரு உணவு துணுக்கும் நோய்வாய்ப்படும் அபாயத்தை குறைக்கின்ற தொடர்ச்சியான ஊட்டச்சத்து உட்கொள்ளலை உறுதி செய்கிறது. நாய்க்குட்டிகள் மற்றும் வயது வந்த நாய்கள் இரண்டிற்கும் மூன்று வசதியான பேக் அளவுகளில் வயது வந்த செல்ல நாய்களுக்கு, பேக் விருப்பங்கள் ரூ.20க்கு 100 கிராம், ரூ.239க்கு 1 கிலோ மற்றும் ரூ.610க்கு 3 கிலோ மற்றும் நாய்க்குட்டிகளுக்கு, ரூ.20க்கு 100 கிராம், ரூ.259க்கு 1 கிலோ மற்றும் ரூ.640க்கு 3 கிலோ ஆகிய அளவுகளில் கோத்ரெஜ் நிஞ் ஜா கிடைக்கிறது.'' என்றார்.

இந்தியாவில் பெருமையுடன் தயாரிக்கப்பட்ட கோத்ரேஜ் நிஞ்ஜா, செல்லப்பிராணி பெற்றோருக்கு அவர்களின் நாய்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை ஆதரிக்க வடிவமைக்கப்பட்ட நம்பகமான, உயர்தர ஊட்டச்சத்து தீர்வை வழங்குகிறது.

# தேனி நாடார் சரசுவதி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 28வது ஆண்டு விழா : நடிகர் சார்லி பங்கேற்பு



பெரியகுளம் ஏப் 11

தேனிமாவட்டம் பெரியகுளம் அருகே வடபுதுபட்டியில் தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறைக்கு சொந்தமான தேனி நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 28 வது ஆண்டுவிழா நடைபெற்றது. கல்லூரி செயலாளர் காசிபிரபு வரவேற்று பேசினார்.

தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன், தலைமை தாங்கினார். உபதலைவர் கணேஷ், பொதுச்செயலாளர் ஆனந்தவேல் மற்றும் பொருளாளர் பழனியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கல்லூரியின் சிஇஇ முனைவர் சரண்யா கல்லூரி மலரின் சுவடுகளுக்கான முகப்புரையை சமர்பித்தார். 28 ஆம் ஆண்டு கல்லூரி மலரினை (சுவடுகள்) தேனி மேலப்பேட்டை இந்து நாடார்கள் உறவின்முறை தலைவர் ராஜமோகன் வெளியிட சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திரைப்பட நகைச்சுவை மற்றும் குணசித்திர நடிகர் கலைமாமணி முனைவர் சார்லி பெற்றுக் கொண்டார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் முனைவர் சித்ரா நடப்புக் கல்வியாண்டிற்கான ஆண்டறிக்கையினையும் கல்லூரி அகடமிக் டீன் முனைவர் கோமதி தன்னாட்சி பெற்றதற்கான அறிக்கையையும் வாசித்தனர். இந்நிகழ்வில் கல்லூரி இணைச்செயலாளர்கள் அருண், செண்பகராஜன், ஆகியோர் கலந்துகொண்டு வாழ்த்தி பேசினர்.

நிகழ்ச்சியின் முடிவில் நாடார் சரசுவதி கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் துணை முதல்வர் சுசீலாசங்கர் நன்றி கூறினார்..



திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் மற்றும் மாநகரட்சி ஆணையாளர் சு.இராமமூர்த்தி ஆகியோர் முத்தமிழறிஞர் கலைஞர் பேருந்து நிலையம் எதிரில் புதியதாக கட்டப்பட்டு வரும் தினசரி சந்தையின் கட்டுமான பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் தலைமை பொறியாளர் செல்வநாயகம், உதவி செயற்பொறியாளர் முனியாண்டி, மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## அலங்காநல்லூரில் முனியாண்டி சுவாமி கோவில் திருவிழா



அலங்காநல்லூர், ஏப்.11.

மதுரை மாவட்டம் உலகப் புகழ் அலங்காநல்லூரில், முனியாண்டி சுவாமி, முத்தாலம்மன், அய்யனார் சுவாமி மற்றும் கருப்பணசுவாமி கோவில்களின் பங்குனி திருவிழாக்கள் நடந்தது.இதில் முதல் நாள் முத்தாலம்மன் சுவாமி, முளைப்பாரிகளுடன் மேளதாளம் முழங்க கோவிலுக்கு வந்து சேர்ந்தது. மறுநாள் வாணவேடிக்கையுடன், தீவட்டி பரிவாரங்களுடன் முனியாண்டி சுவாமி நகர் வலம் வந்து திருக்கோவிலை அடைந்தது. தொடர்ந்து சகல பரிவாரங்களுடன் முத்தாலம்மன் பூப்பல்லக்கில் எழுந்தருளி பூஞ்சோலை சென்றது. 3ம் நாள் கோவிலில் கிடாய் வெட்டுதல், அன்றிரவு சுவாமிகள் நகர் வலம் வந்து மந்தையில் எழுந்தருளியது.

விழாவையொட்டி வெளி மாவட்டங்கள், சுற்றுவட்டாரங்களிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் குவிந்து சாமி கும்பிட்டனர். விழா ஏற்பாடுகளை அறங்காவலர் குழு தலைவர் அமுல்ராணி ரகுபதி, இந்து சமய அறநிலைய துறை செயல் அலுவலர் சூரியன், மற்றும் அறங்காவலர்கள், கிராம பொதுமக்கள் செய்திருந்தனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை அலங்காநல்லூர் போலீசார் செய்திருந்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக எதிரில் உள்ள முத்துசாமி பிரதர்ஸ் இன்டஸ்ட்டிரியல் காம்பளக்ஸில் எழுதுபொருள் மற்றும் அச்சு துறையின் சார்பில் திருப்பூர்,கோவை, ஈரோடு,மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழ் நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சு துறையின் கிளை அச்சகம் திறப்பு விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.உடன் மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, துணை பணி மேலாளர் ராஜ்குமார், தலைமை பொறியாளர் செல்வ நாயகம், உதவி ஆணையர் வினோத் ஆகியோர் உள்ளனர்.

## திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் ஆண்டு விழா!



திருப்பூர், ஏப்.11

திருப்பூர் மாநகரம் மங்கலம் சாலையில் உள்ள திருப்பூரில் பிரசித்தப்பெற்ற திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 30வது ஆண்டு விழா மற்றும் விளையாட்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இவ் விழாவில் கல்லூரியின் தலைவர் மற்றும் தாளாளர் கோவை மண்டலத்தின் வீட்டு வசதி சங்கத்தின் துணை பதிவாளர் அர்த்தநாரீஸ்வரன் தலைமையேற்று துவக்கி வைத்தார். மாணவியர் பேரவையின் பொறுப்பாளர் முனைவர் பொன்மலர் வரவேற்புரை ஆற்றினார். இவ்விழாவில் 2024 25 ஆம் ஆண்டுக்கான ஆண்டு அறிக்கையை கல்லூரி முதல்வர் முனைவர் வசந்தி விளக்க உரையாற்றினார். நாமக்கல் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் செயலாளர் முருகேசன், காங்கேயம் வட்ட வீட்டு வசதி சங்கத்தின் செயலாளர் செல்வராஜ்,

திருப்பூர் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்தின் செயலாளர் முத்துரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக வீரமங்கை வேலு நாச்சியார், அரிமா சங்கத்தின் தலைவர் நறுமலர் கருணாநிதி கலந்துகொண்டு சிகரத்தை நோக்கி என்னும் தலைப்பில் வலிகளைத் துடைத்து சமுதாயத்தில் எப்படி முன்னேற வேண்டும் என்று மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார்.

பின்னர் பாரம்பரிய பரத நாட்டியம், கண் கவர் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், யோகா, ஆடை அலங்கார அணி வகுப்பு போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இறுதியில் கல்லூரி மாணவியர் பேரவை தலைவர் ராகவர்த்தினி நன்றியுரையாற்றினார். நிர்வாக அலுவலர் நிர்மல் ராஜ்,கல்லூரி பேராசிரியைகள், அலுவலர்கள் மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.



இலவம் பஞ்சு உரிய விலை நிர்ணயம் செய்யக்கோரி தேனி ஆட்சியர் அலுவலகம் முன் விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலவசம் பஞ்சிக்கு உரிய விலை கோரி ஆர்ப்பாட்டம் செய்த விவசாயிகள் தேனி ஆட்சியர் அலுவலகம் முன் கோஷங்களை எழுப்பி இலவசம் பஞ்சை அரசே கொள்முதல் செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வருசநாடு இலவசம் பஞ்சு சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் மற்றும் மா.கம்யூ கட்சியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்கள் தொடர்பு முகம் முடிந்து மாவட்ட ஆட்சியர் ரஞ்சித் சிங் வந்த பின் அவரிடம் மனு அளித்தனர்.

## கேரளாவுக்கு கடத்த முயன்ற 2000 கிலோ ரேஷன் அரிசி கம்பத்தில் பறிமுதல்



கம்பம் ஏப்.11:

தேனி மாவட்டம் கம்பத்தில் பதுக்கி வைத்து கேரளாவுக்கு கடத்த முயன்ற 2 ஆயிரம் கிலோ ரேஷன் அரிசியை போலீசார் பறிமுதல் செய்தனர்.

கேரளத்திற்கு கடத்திச் செல்வதற்காக கம்பம் நகரில் ரேஷன் அரிசி மூட்டைகளை பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவல் அடிப்படையில் உத்தமபாளையம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுப் பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமாருக்கு தகவல் கிடைத்தது போலீசார் கம்பம் உத்தமபுரம் பகுதியில் சோதனை நடத்தினர். கம்பம் மணிகட்டி ஆலமரம் தெருவில் குடிநீர்த் தொட்டி அருகே நூற்றுக்கும் மேற்பட்ட சிறிய மூட்டைகளில் 2 டன் (2000கிலோ) ரேஷன் அரிசி வைக்கப்பட்டு இருப்பதைக் கண்டறிந்து பறிமுதல் செய்தனர். பின்னர் பறிமுதல் செய்த ரேஷன் அரிசியை உத்தமபாளையம் நுகர்பொருள் வாணிபக் கிட்டங்கியில் ஒப்படைத்து ரேஷன் அரிசியை பதுக்கி வைத்து கேரளாவுக்கு கடத்த முயன்ற நபர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.

**சாலைவிதிகளை மதிப்போம்! பாதுகாப்பாக வாழ்வோம்!**

## தமிழ்நாடு நில அளவை மதுரை மாவட்ட மையத்தின் தேசிய நிலஅளவை தினவிழா



மதுரை, ஏப்.11

தேசிய நிலஅளவை தினவிழா தமிழ்நாடு நில அளவை அலுவலர்கள் ஒன்றிப்பு மதுரை மாவட்ட மையத்தின் சார்பில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ராஜ்குமார் தலைவை தாங்கினார். முத்து முனியாண்டி முன்னிலை வகித்தார். ரகுபதி பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர். ஓய்வு பெற்ற அலுவலர்களுக்கு நினைவு கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது முக்கிய தீர்மானமாக நில அளவையர்களுக்கு நீதிமன்ற பயிற்சி நிர்வாக பயிற்சி வழங்க வேண்டும் என்று தீர்மானங்கள் இயற்றப்பட்டது. ஓய்வு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் ஆசை தம்பி மாவட்ட செயலாளர் மணவாலன், ஜெயராஜ் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். திரு மணிரத்தினம் நன்றியுரை வழங்கினார்.

## முதுகுளத்தூர் பகுதிகளில் அரசு திட்ட பணிகளை ஆட்சியர் ஆய்வு

முதுகுளத்தூர், ஏப்,11

முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் நேற்று ஊரக வளர்ச்சி துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட கலெக்டர் சிம்ரன் ஜித் சிங் காலோன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் குமார குறிச்சி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற கட்டிடத்தை பார்வையிட்டார். இதைத் தொடர்ந்து குமார குறிச்சி கீழப்பனையூர் செல்லும் சாலையில் 9 லட்சம் மதிப்பீட்டில் அயோத்திதாஸ் பண்டிதர் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் சிறுபாலத்தில் பார்வையிட்டார்.



மேலும் தேரிருவேலி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் கீழ் ரூ.80 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மகளிர் சுய உதவி குழு கட்டிடத்தையும் பார்வையிட்டத்துடன் இளங்காக்கூர் கிராமத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கட்டிடம் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் அரசு பள்ளி கட்டிடம் உள்ளிட்ட திட்டப்பணிகளை பார்வையிட்டு பணிகளை உரிய காலத்திற்குள் முடித்திட வேண்டுமெனவும் பணிகளின் உறுதி தன்மையை கண்காணித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுறுத்தினார். ஆய்வின்போது முதுகுளத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், லட்சுமி, ஜானகி உதவி பொறியாளர்கள் விக்னேஷ், குமார குறிச்சி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் செந்தில் தேரிருவேலி முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் அபூபக்கர் சித்திக், ஊராட்சி செயலாளர், செல்வகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

## கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வளர்ச்சித்திட்டப் பணிகளை துவக்கி வைத்த அமைச்சர்

கோவை, ஏப்.11

மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கூஷிசெந்தில்பாலாஜி கோயம்புத்தூர் மாநகராட்சிக் குட்பட்ட ஐந்து மண்டலங்களில் 5 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும் மற்றும் 26 முடிவுற்ற பணிகளையும் என ரூ.17.84 கோடி மதிப்பீட்டிலான பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர் தலைமையில், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி , மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.



தமிழ்நாடு முதலமைச் சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, இன்றைய தினம் (10.04.2025) கிழக்கு மண்டலம், வார்டு எண்.8க்குட்பட்ட சித்ரா, காளப்பட்டி சாலை (என்.ஜி.பி. பெட்ரோல் பங்க் முதல் சரவணம்பட்டி பத்மா மில் வரை) உள்ள இணைப்பு சாலையில் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டுதல் மற்றும் சாலை சீரமைத்தல் பணிக்கு அடிக்கல் நாட்டி, வார்டு எண்.61 க்குட்பட்ட சிங்காநல்லூர் குளத்தில் 15வது நிதிக்குழு திட்டத்தின்கீழ் ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் 2விலிஞ் சுத்திகரிப்பு நிலையத்தினை மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, வடக்கு மண்டலம் வார்டு எண்.30க்குட்பட்ட கணபதி பகுதியில் ரூ.18.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் மற்றும் வார்டு எண்.28 க்குட்பட்ட ஆவாரம்பாளையம் பகுதியில் ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நியாய விலைக் கடையினையும், வார்டு எண்.1க்குட்பட்ட துடியலூர், அப்பநாயக்கன்பாளையம் பகுதியில் ரூ.21.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டிடத்தினையும் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் , திறந்து வைத்தார்.

முன்னதாக, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கூஷிசெந்தில்பாலாஜி கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், அம்மணியம்மாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 10961 மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் 168 பயனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், மாநகராட்சி துணை ஆணையாளர்கள் த.குமரேசன். அ.சுல்தானா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக், முன்னாள் பேரூராட்சி தலைவர் தொண்டாமுத்தூர் ரவி, மண்டல குழுத்தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், வே.கதிர்வேல், மீனாலோகு, தெய்வயானை தமிழ்மறை, ர.தனலட்சுமி, பணிகள் குழுத்தலைவர் சாந்திமுருகன், கல்விக்குழுத் தலைவர் நா.மாலதி, நகரமைப்பு குழுத்தலைவர் சந்தோஷ். மாநகர தலைமை பொறியாளர் (பொ) திரு .முருகேசன், செயற்பொறியாளர்கள் கருப்புசாமி, இளங்கோவன், உதவி ஆணையர்கள் முத்துசாமி. துரைமுருகன், வருவாய் கோட்டாட்சியர் ராம்குமார், உதவி செயற்பொறியாளர்கள் கனகராஜ், சவிதா, மாவட்ட மாற்றுத் திறானாளிகள் நல அலுவலர் சந்திரமோகன், உதவி நகர திட்டமிடுநர்கள் கோவிந்த பிரபாகரன், மகேந்திரன், மண்டல சுகாதார அலுவலர்கள் சந்திரன், வீரன், குணசேகரன், ஆண்டியப்பன், உதவிப் பொறியாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161